


இராமநாதபுரம் மாவட்ட

# வரலாற்று ஆவணக்குழு

# செய்தி மலர்

மலர்: 2 அக்டோபர் 1989

## முகவையில் முதிர்ந்த முத்துக்கள்

வாரியிடம் சேராத வையை ஆற்றின் வளம் பெற்ற நமது முகவை மாவட்டத்தில், முத்துப் போன்ற அரிய பெரும் மக்கள் மலர்ந்து, முதிர்ந்து, சிறந்து வரலாறு படைத்துள்ளனர். தமிழ்ப் பணி-யிலும், தேசப் பணியிலும் விஞ்சி நின்ற அவர்களில் சிலரது பட்டியல் இங்கு கொடுக்கப்பட்டுள்ளது.

1. **இராமானுஜக் கவிராயர்:**

   தமிழ் ஆசான், தாம்சன், கிளார்க் வின்ஸ்லோ போன்ற ஆங்கில மேதைகளுக்கு தமிழை போதித்தவர். திருக்குறளையும் வேறு சில நூற்களையும் முதன்முறையாக அச்சில் கொணர்ந்தவர்.

2. **துரைராஜா என்ற முத்துராமலிங்க சேதுபதி:**

   தமிழ்ப்புலவர், இசைக்கலைஞர், பல சிற்றிலக்-கியங்களைப் படைத்தவர்.

3. **பொன்னுச்சாமித் தேவர்:**

   இராமநாதபுரம் சமஸ்தான நிர்வாகி, தமிழ்ப் புலவர், புரவலர், யாழ்ப்பாண ஆறுமுக நாவலரைக் கொண்டு பல நூல்களைப் பதிப்-பித்தவர்.

4. **பாஸ்கர சேதுபதி மன்னர்:**

   வரையாது வழங்கிய வள்ளல், தமிழ்ப் புலவர், ஆங்கில சொற்பொழிவாளர், சுவாமி விவேகா-னந்தரை 1893ல் சிக்காக்கோவில் நடைபெற்ற அனைத்து சமய மாநாட்டிற்கு அனுப்பி வைத்தவர்.

5. **பாண்டித்துரைத் தேவர்:**

   வள்ளல், பெரும்புலவர், இசைமேதை, மதுரை-யில் நான்காம் தமிழ்ச்சங்கம் நிறுவியவர். தேச பக்தர், வ. உ. சிதம்பரம் பிள்ளை, சுதேசிக் கப்பல் ஓட்டும் பணிக்கு ஒரு லட்சம் ரூபாய் வழங்கியவர்.

6. **பூச்சி ஸ்ரீனிவாச ஐயங்கார்:**

   சிறந்த இசைமேதை, சாகித்ய கர்த்தா, அரியக் குடி இராமானுஜம் போன்றவர்களுக்கு இசை பயிற்றுவித்த ஆசான்.

7. **மகா வித்வான் ரா. ராகவ ஐயங்கார்:**

   பெரும் புலவர், பல இலக்கியங்களைப் படைத்-தவர், சிறந்த இலக்கிய ஆய்வாளர்.

8. **மகா வித்வான் மு. ராகவ ஐயங்கார்:**

   பெரும் புலவர், ஆராய்ச்சியாளர், கேரள பல்கலைக் கழகத்தில் தமிழ் போதித்தவர், லெக்சிகன் அகராதி ஆசிரியர்.

9. **மகான் மாப்பிள்ளை லெப்பை ஆலிம்:**

   தமிழ், அரபி, பார்சி மொழி வல்லுனர், இசுலாமிய சமய நெறியில் வித்தகர், பெரும் நூலாசிரியர்.

10. **ஞானி குணங்குடி மஸ்தான்:**

    பெரும் ஞானி, இளமையில் துறவு மேற்கொண்-டவர், ஞானப் பாடல்களின் ஆசிரியர், அரபு, தமிழ் மொழிகளை ஆழ்ந்து பயின்ற சிறந்த புலவர்.

# வரலாறு சொல்லும் ஊர்

**இராஜசிங்கமங்கலம்:** (திருவாடானை வட்டம்)

மதுரையை ஆண்ட மூன்றாம் இராஜசிம்ம பாண்டியனால் (கி.பி. 900—920) இந்த ஊர் ஏற்படுத்தப்பட்டிருக்க வேண்டும் என்பது வரலாற்று ஊகம். அங்கு, "உலப்பில் ஓத ஒலி பெருங்கடல் போல முன்னம் அங்கு அமைத்த" கண்மாயின் கரையில் இருந்து தான் "சின்னமனூர் செப்பேடு" என வழங்கப்படும் சிறந்த ஆவணத்தை அந்த மன்னன் வழங்கினான். மதுரை அரசு கட்டிலுக்கு கி.பி. 1168-70ல் நடந்த வாரிசு பூசல்களில் தலையிடுவதற்காக இலங்கையில் இருந்து வந்த தண்ட நாயகனது படைகள், அப்பொழுது அழிவுற்று இருந்த இந்தக் கண்மாயை செம்மை செய்ததாக இலங்கை நாட்டு "மகாவம்சம்" கூறுகிறது. இங்கு உள்ள கைலாசநாதர் ஆலயம், ஆயிரம் ஆண்டுகளுக்கு முற்பட்ட பாண்டியர் படைப்பு.

★ ★ ★

வளமும் நலமும் பெற்ற சேதுபதி மன்னர்களது ஆட்சியில் இந்த ஊர், மறவர் சீமையின் தானியக் களஞ்சியமாக விளங்கியது. திருமலை சேதுபதி மன்னர் மீது கி.பி 1670ல் தளசிங்கமாலை பாடிய அழகிய சிற்றம்பலக்கவிராயருக்கு, இந்தக் கண்மாயின் ஐந்து மடைப் பாசனப் பரப்பு மானியமாக வழங்கப்பட்டது. பின்னர், இந்தப் பெரும் பரப்பின் ஒரு பகுதி இராமேசுவரம் திருக்கோயிலுக்காக அதே மன்னரால் விட்டுக்கொடுக்கப்பட்டது.

விஜய ரகுநாத சேதுபதி மன்னர் (கி.பி.1710-1725) ஆட்சியின் பொழுது, இங்கு ஒரு மண் கோட்டை அமைக்கப்பட்டது (ஊரின் அந்தப்பகுதி இன்றும் கீழக்கோட்டை என வழங்கப்பட்டு வருகிறது) என்றாலும் அடுத்த சில ஆண்டுகளில், இந்த ஊருக்கு அண்மையில் உள்ள ஆறுமுகக் கோட்டைக்கு ராணுவ முக்கியத்துவம் ஏற்பட்டது. ஆனால், 1799-1800ல் கும்பெனியாரால் சிறைப் படுத்தப்பட்ட சேதுபதி மன்னருக்கு ஆதரவாகவும், கும்பெனியாருக்கு எதிராகவும் நடந்த மக்கள் இயக்கத்தின் பொழுது, இந்த ஊர் கிளர்ச்சிக்காரர்களது பிரதான தளமாக விளங்கியது. கிளர்ச்சியில் தீவிரமாகப் பங்கு கொண்ட குமாரத்தேவன், ஜகந்நாத ஐயன் என்ற இரு தேசபக்தர்களது சொத்துக்கள் பறிமுதல் செய்யப்பட்டன. சங்கிலியால் பிணைக்கப்பட்ட அவர்களுக்கு, கசையடி கொடுக்கப்பட்டு கடலுக்கு அப்பால் நாடு கடத்தப்பட்டனர். நாட்டை நினைந்து நினைந்து அழுத அவர்களது தீனக்குரல், நம்மைச் சேருவதற்கு முன்னர் அவர்கள் தியாகிகளாகி விட்டனர்!

தமிழகத்தின் இரண்டாவது பெரிய ஏரியான இந்த ஊர்க் கண்மாய் பாசனத்தில் 4,766 ஏக்கர் நஞ்சை இருந்ததாக ஒரு நூறாண்டுக்கு முற்பட்ட செய்தி உள்ளது. இதில் 3,805 ஏக்கர் நிலத்தின் தீர்வையாக ரூ. 28,170/- வசூலிக்கப்பட்டதாக இன்னொரு புள்ளிவிவரம் தெரிவிக்கின்றது. கி.பி. 1884ல் ஏற்பட்ட பெரு வெள்ளத்தின் பொழுது இந்தக் கண்மாய்க் கரையில் ஐம்பத்து ஆறு உடைப்புகள் ஏற்பட்டு அடைக்கப்பட்டன.

---

## என்மனங்கொண்டான்:

**(இராமநாதபுரம் வட்டம்)**

எம்மண்டலமும் கொண்டான் என்ற பெயர் கடந்த ஐநூறு ஆண்டு கால இடைவெளியில் முற்றிலும் திரிபு பெற்ற இன்று என்மனங்கொண்டான் என்ற இனிய தமிழ்ப் பெயரில் இந்த ஊர் வழங்கப்பட்டு வருகிறது. பிற்காலப் பாண்டியப் பேரரசரில் மிகச் சிறப்பான ஆட்சியாளராக விளங்கிய மாறவர்மன் சுந்தர பாண்டியனது பெயரில் எழுந்தது இந்த ஊர். இவனது கல்வெட்டுக்கள், திருப்புல்லாணி, பெருங்கரை, எமனேஸ்வரம், அருப்புக்கோட்டை, பள்ளிமடம் ஆகிய ஊர்களில் உள்ளன. ''திருபுவனச் சக்கரவர்த்தி எம்மண்டலமுங் கொண்டருளிய'' என்று தான் இவனது மெய்க்கீர்த்திகள் தொடங்குகின்றன.

மன்னர்களின் புகழ்ப் பெயர்களில் ஊர்கள் தமிழகத்தில் அமைவது புதுமையான நிகழ்ச்சி அல்ல. கங்கைகொண்டான் (இராமநாதபுரம்) கடாரம் கொண்டான் (இராமநாதபுரம்) கடாரம்கொண்டான் (திருவாரூர்) கொல்லங்கொண்டான் (இராஜபாளையம்) இளந்திரைகொண்டான் — ஈழம்திறை கொண்டான் (இராஜபாளையம்) என்ற தமிழக ஊர்கள் இதற்குச் சான்று.

இராமேசுவர யாத்திரை மார்க்கத்தில் இந்த கிராமம் இருப்பதால் இங்கு ஒரு அன்ன சத்திரத்தை ரெகுநாத சேதுபதியின் மனைவி காதலி நாச்சியார் ஏற்படுத்தினார்.

ஆதாரம்:
1) கி.பி. 1692ம் வருட மூப்பன்மார் செப்பேடு. (டாக்டர். S.M. கமால் சேகரித்து அரசிடம் வழங்கியது)
2) பாண்டியர் வரலாறு (1960)- சதாசிவம் பண்டாரத்தார்.

## ஜனவளி:

**(திருவாடானை வட்டம்)**

தஞ்சை சோழர்களில் மிகச்சிறந்த பாராட்டுக்கு உரியவனாக விளங்கியவன் பேரரசன் ராஜராஜன் (கி.பி. 985-1013). தனது ஒன்பதாவது ஆட்சி ஆண்டு முதல் அவனது வெற்றிப்படைகள் வடக்கிலும் தெற்கிலும், கிழக்கு கடலையும் கடந்து ஆங்காங்கு அவனது புலிக்கொடியினைப் பறக்க விட்டதை அவனது மெய்க்கீர்த்திகள் தெரிவிக்கின்றன. ''ஜனநாதன்'' என்பது அவனது விருதுப் பெயர்களில் ஒன்று. அவனது பாண்டிய நாட்டுப் படையெடுப்பின் பொழுது அவனது படைகள், இன்றைய இராமநாதபுரம் மாவட்டத்தின் வட பகுதி வழியாக-திருவாடானை, பரமக்குடி, மானாமதுரை வட்டங்களை ஊடுருவி மதுரைக்குச் சென்றன. அந்த படையெடுப்பு பாதையினை நினைவூட்டும் ஜனநாதன் வழி இன்று தொள்ளாயிரம் ஆண்டுகளில் ஜனவளியாகி விட்டது. இந்தப் பகுதியில் சோழர்களைக் குறிப்பிடும் கிராமங்கள் அமைந்து இருப்பதும் இங்கு குறிப்பிடத்தக்கது. அந்தக் கிராமங்களின் பெயர்கள் — அகளங்கள் கோட்டை, செம்மியன்குடி, சோழந்தூர் (சோழன் உவந்த ஊர்), சோழிக்குடி, சோழப் பெரியான், என்பன அவை. இந்தப் பாதையின் தொடர்ச்சியை பட்டுக்கோட்டை கல்வெட்டு ''ஜனநாதன் பாதை'' யென்றே குறிப்பிடுகிறது.

பழந்தமிழகத்தில் இத்தகைய பெருவழிகள் அமைந்து இருந்ததை கொங்குப் பெருவழி என்ற தொடர் நினைவூட்டுகிறது.

---

**பட்டயங்களின் விலை சில காசுகள் - அவைகளில் கண்டுள்ள செய்திகள் விலை மதிப்பற்றவை.**

# மறைந்த மாநகர்

இராமநாதபுரம் நகருக்கு வட கிழக்கே இருபது கி.மீ. தொலைவில் உள்ள ஆற்றங்கரை என்னும் சிற்றூரும் அதனை அடுத்துள்ள அழகன் குளம் என்ற ஊரும் இணைந்து முற்காலத்தில் பெரும் பட்டினமாக விளங்கியது என்று சொன்னால் யாரும் நம்புவது எளிது அல்ல. ஆனால் இரண்டு ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்னர் ஆப்பிரிக்கா கண்டத்தின் வடபகுதி, மத்திய தரைக்கடல் பகுதியில் இருந்து, வணிகமக்கள் விழைந்து வந்து குழுமிய வியாபாரத் தலமாக இருந்து வந்தது என்பதை தமிழக அரசின் தொல் பொருட் துறையினரது அகழ்வுகள் நிலைநாட்டியுள்ளன.

ரோமப் பேரரசின் பகுதியாக விளங்கிய தூனிஷிய நாட்டு "அம்போரா" என்ற வகை மண் பாண்டங்களும், நமது நாட்டு மௌரியப் பேரரசர்களது அரண்மனையில் பயன்படுத்தப்பட்ட கருநிற மண்பாண்டங்களும், அழகன்குளம் அகழ்வில் கிடைத்துள்ளன இவை 2100 ஆண்டுகளுக்கு முற்பட்டவை. இவை தவிர, ரோமப் பேரரசர் வாலன்டைன் II (கி.பி 380) வெளியிட்ட வெள்ளிக் காசுகளும், பளிங்கு, பவளமணிகள், சங்கு வளையல்கள் ஆகியனவும் ஏராளமாகக் கண்டெடுக்கப்பட்டு உள்ளன. தொடர்ந்து, டாக்டர் எஸ்.எம். கமால் அவர்களது கள அகழ்வில் கி.மு. மூன்றாம் நூற்றாண்டைச் சேர்ந்த நீண்ட வடிவு செப்புக்காசு, பாண்டியர், மதுரை சுல்தான்கள், மாவலிவாணாதரயரது செப்புக்காசுகளும் கிடைத்துள்ளன.

இவையனைத்தும் இந்த ஊர், வெளிநாட்டு உள்நாட்டு வணிகத்தில் பல நூற்றாண்டுகள் சிறந்து விளங்கியதைக் குறிப்பனவாக உள்ளன. கிபி. இரண்டாவது நூற்றாண்டில் கிழக்கு கடற்கரைக்கு வருகைதந்த உலகப்பயணி பெரிபுளூஸ், அறகார் என்ற கடற்கரைப் பட்டினம் முத்துக்களுக்கும் மெல்லிய பஞ்சு ஆடைகளுக்கும் பெரும் சந்தையாக இருந்ததை குறிப்பிட்டு இருப்பதும் இங்கு சிந்திக்கத் தக்கதாக உள்ளது. குஜராத் கடற்கரையில் கிரேக்க-யவனர்களது இருப்பிடமாக விளங்கிய யோனாகர், நாளடைவில் ஜூனாகாத் எனத்திரிந்தது போல, யவனர்களது "அறகாரும்" இத்தகைய திரிபு பெற்று இருக்கலாம்.

வைகை நதியின் பிரவாகத்தில் கொண்டு சேர்க்கப்பட்ட மணல் திட்டுக்களும், பாக்ஸ் நீர் இணைப்பில் எழுந்த புவி இயல் மாற்றங்களும், ஆற்றங்கரை — அழகன்குளம் கடற்கரைப் பட்டினத்தை ஆழமற்ற துறைமுகமாக மாற்றி வரலாற்றில் அதன் சிறப்பைச் சிதைத்துவிட்டன முத்துராமலிங்க சேதுபதி மன்னர் (கி.பி. 1781-95) அங்கு அமைத்துள்ள அழகிய சத்திரம் மட்டும் மறைந்த மாநகரின் எச்சமாகக் காட்சியளித்துக் கொண்டு இருக்கிறது.

இத்தகைய தொன்மைச் சிறப்பு மிகுந்த மாநகரின் சிறப்புக்களை, வெளிக்கொணர்ந்து வரலாற்றிற்கு உதவுவதற்கு, மத்திய, மாநில அரசுகளின் தொல்லியல் துறைகள், மேலும் தாமதம் இல்லாமல் கள அகழ்வுகளையும் ஆய்வுகளையும் தொடருதல் வேண்டும். அந்தப் பணியினை முழுமையாக நிறைவேற்றுவதால், வரலாற்று ஆசிரியர்களும் ஆய்வாளர்களும் தங்களது ஒத்துழைப்பினை நல்குவதற்கு தயாராக உள்ளனர்.

---

# பாஸ்கர சேதுபதி மன்னரது பதிவேடு

மறவர் சீமையின் மணி விளக்காக வாழ்ந்தவர்கள் இராமநாதபுரம் சேதுபதி மன்னர்கள். அவர்களில், அருமைத் தமிழிலும், ஆங்கிலத்திலும், அழகு ஒழுக எழுதவும் பேசவும் வல்ல பண்பாளராக, சிறந்த கொடைவள்ளலாக, சைவ சித்தாந்தியாக வாழ்ந்து மறைந்தவர் மன்னர் பாஸ்கர சேதுபதி. (கி.பி. 1868—1903) நாள்தோறும், தமது வாழ்க்கை நிகழ்ச்சிகளை நாட்குறிப்பிலும், சொந்தச் செலவுகளை கணக்குப் பதிவேட்டிலும் பதிவுபெறுமாறு செய்து வந்தார்.

இராமநாதபுரத்திலிருந்து ரயில் போக்குவரத்து இல்லாத நிலையில், அவர் மதுரை, ஈரோடு வழியாக சென்னை சென்று வந்தார். சென்னையில் அவரது வாழ்க்கை, ஆற்காடு நவாப், சென்னை கவர்னர் சந்திப்பு, திருவனந்தபுரம் மன்னர், பொப்பிலி மன்னர் ஆகியோருடன் தொடர்பு, புரசை, மயிலை, திருவல்லிக்கேணி ஆலயங்களில் வழிபாடு, அர்ச்சகர்கள். தேவதாசிகளுக்கு அன்பளிப்பு, சட்டவல்லுநர் பாஷ்யம் ஐயங்கார், பாடகர் தட்சிணாமூர்த்தி சிவன், அன்பில் கோபாலாச்சாரி ஆகிய மேதைகளுடன் கலந்துரையாடல், ஷேக்ஸ்பியர் நாடகம் கண்டு களித்தல், பொது நிறுவனங்களுக்கு அன்பளிப்பு வழங்குதல் போன்ற காரியங்களுக்கு செலவு செய்யப்பட்ட விவரங்கள் இந்தப் பதிவேட்டில் இடம் பெற்றுள்ளன. இன்னும் நூறு ஆண்டுகளுக்கு முன்னர் சென்னை நகரில் விற்பனை செய்யப்பட்ட பொருள்களின் விலைகளும் தெரிய வருகின்றன.

குறிப்பாக மிசு உயர்ந்த ரக அரிசி ரூ. 1க்கு 4½ படி

குதிரைக்கானம் ரூ. 1க்கு 13 படிகள்

ஆட்டு இறைச்சி 1 வீசை, எட்டு அணு (50 காசுகள்)

தேங்காய் எண்ணை 1 வீசை, பத்தணு (65 காசுகள்)

நல்ல எண்ணை 1 வீசை, ஒன்பதுஅணு (55 காசுகள்)

மண் எண்ணை டின் 1க்கு ரூ. 2.6.0 (ரூ. 2.40)

பாக்கு வீசை 1க்கு ரூ 1.10.0 (ரூ. 1.62 காசுகள்)

1-1-1891 முதல் 25-2-1891 வரையான காலத்தில் செலவு செய்யப்பட்ட செலவு விவரங்களும் 25-2-1891 தேதியன்று மன்னர் ஆங்கிலத்தில் கையெழுத்திட்டுள்ள இந்தப் பதிவேட்டினைக் கண்டுபிடித்து நமது மாவட்ட ஆவணக் குழுவிடம் டாக்டர். எஸ். எம். கமால் ஒப்படைத்துள்ளார். இந்தப் பதிவேடு அரசினரால் பாதுகாக்கப்படுவதற்கு சென்னையில் உள்ள தமிழ்நாடு ஆவணக் காப்பகத்திற்கு அனுப்பப்படுகிறது.

இந்த மன்னர் தமது கையால் வரைந்த நாட்குறிப்புகளில் கி.பி. 1893ம் ஆண்டு நாட்குறிப்பு தொகுதி ஒன்று மட்டும் தமிழ்நாடு அரசு ஆவணக் காப்பகத்தில் வைத்துப் பாதுகாக்கப்பட்டு வருகிறது. சேதுபதி மன்னர் வரலாற்றினை ஆய்வு செய்பவர்களுக்கு, அது பயனுள்ள செய்திக் களஞ்சியமாகப் பயன்பட்டு வருகிறது.

# கடன்பட்ட கட்டபொம்மு நாயக்கர்

பாஞ்சாலங்குறிச்சி பாளையக்காரரான கட்டபொம்மு நாயக்கரைப் பற்றி அறியாதவர் யாரும் இருக்க முடியாது. ஏனெனில் வெள்ளையரை எதிர்த்ததற்காக தமது உயிரை விலையாகக் கொடுத்தவர் அல்லவா? அவரைப் பற்றி இதுவரை கேள்விப்படாத செய்தியொன்றைத் தாங்கிய ஆவணம் தமிழ்நாடு ஆவணக் காப்பகத்தில் இருப்பது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

தமது பாளையத்திற்கான கிஸ்தியை இராமநாதபுரம் கலெக்டரிடம் செலுத்துவதற்கு கட்டபொம்மு நாயக்கர் இராமநாதபுரம் கோட்டைக்கு வருவது வழக்கம். ஒரு முறை அவர் இராமநாதபுரம் வந்த பொழுது, பக்கத்தில் உள்ள இராமேசுவரம் சென்று ஸ்ரீ இராமநாதசுவாமி தரிசனம் செய்து திரும்பும் எண்ணம் அவருக்கு ஏற்பட்டது. ஒரு பாளையத்தின் அதிபர், சாதாரண மக்களைப் போன்று இராமேசுவர யாத்திரையை முடித்துவிட்டு திரும்ப இயலாதல்லவா? ஆதலால், அந்த யாத்திரைக்கு தேவையான பணத்தை கடனாகப் பெற முடிவு செய்தார்.

இராமநாதபுரம் கோட்டைக்குள் இருந்த இராமசாமி நாயக்கர் என்ற தனவந்தரிடம் இரண்டு கடன் முறிகளை கையெழுத்திட்டுக் கொடுத்து 13,000 பக்கோடா பணத்தை பெற்றுச் சென்றார். கடன் தொகையில் இராமநாதசுவாமி தரிசனம் ஆடம்பரமாக நிறைவேறியது.

இராமேசுவரம் யாத்திரை முடிந்து மூன்று ஆண்டுகள் ஆகின. கட்டபொம்மு நாயக்கர் கடன் தொகையில் சிறு பகுதியைக்கூட திருப்பிச் செலுத்தவில்லை. கும்பெனியாரது விசாரணை ஒன்றிற்காக கி.பி. 1798ல் இராமநாதபுரம் வந்த அவர், கடன் முறிகளை புதுப்பித்துக் கொடுத்துச் சென்றார்.

பின்னர், அவர் கும்பெனியாருடன் பகைத்துக் கொண்டு கிஸ்தி கட்ட மறுத்ததால், போர் தொடுத்த கும்பெனியாரிடம் தோல்வியுற்று தொண்டமான் சீமைக்கு ஓடியவரைப் பிடித்து 16-10-1799ல் கயத்தாறில் தூக்குப் போட்டனர் கும்பெனியார். அவரது பாளையத்தையும் தங்களது உடமையாக்கிக் கொண்டனர் கட்டபொம்மு நாயக்கர் பெற்ற கடனை - வட்டித் தொகையுடன் கூடிய, 22,000 பக்கோடா பணத்தை - வசூலிப்பதற்கு வழியில்லாமல் துடித்தார் இராமசாமி நாயக்கர். கடைசி முயற்சியாக, சென்னையில் இருந்த கும்பெனி கவர்னருக்கு 26—11—1799ல் முறையீடு ஒன்றினை அனுப்பி கடன்தொகைக்கு பரிகாரம் கோரினார். பரங்கியர் அதற்கெல்லாம் மசிந்தவர் அல்லரே!

இந்த முறையீடு சென்னையில் உள்ள தமிழ்நாடு ஆவணக் காப்பகத்தில் உள்ளது. (Madura District Records, Vol. 1180)

---

# திருவிழாவிற்கு பீரங்கி

பீரங்கியை வெடித்து போரில் அழிவை ஏற்படுத்துவது இயல்பு. ஆனால் திருவிழா தொடக்கத்தையும் முடிவையும் ஆண்டுதோறும் அறிவிக்க பீரங்கியை வெடிக்கும் வழக்கம் நாற்பத்து ஐந்து ஆண்டுகளுக்கு முன்வரை தொண்டியில் இருந்ததை தெரிவிக்கும் ஆவணங்கள் அண்மையில்தொண்டியில் கிடைத்து உள்ளன.

இருநூறு ஆண்டுகளுக்கு முன்னர் மனிதப் புனிதர் ஒருவர் தொண்டியில் வாழ்ந்து வந்தார். அவர் பெயர் ஷெய்கு அபூபக்கர் சாயபு என்பது. பல சிறந்த சித்துக்களைச் செய்து ஆன்மீக வழி-காட்டியாகவாழ்ந்த அவரை கி.பி. 1774ல், ஆற்காடு நவாப் நேரில் வந்து தரிசித்து ஆசிபெற்று மகிழ்ந்-தார். மகானது தவச்சாலையில் தூண்டா விளக்கு தொடர்ந்து துலங்குவதற்கும் தண்டாலக்குடியிலும், சித்தனேந்தலிலும் நிலமானியங்களை வழங்கினார். கி.பி. 1783ல் இந்த மகான் மறைந்த பிறகு அவரது நினைவாக ஆண்டுதோறும் பத்து நாட்கள் கந்தூரி திருவிழா அவரது அடக்க இடத்தில் நடந்து வருகிறது. இந்த விழாவின் தொடக்கமும் நிறை-வையும் பக்கத்தில் உள்ள ஊர்களுக்கு தெரியப் படுத்துவதற்காக, அன்பர் ஒருவர் இலங்கையில் இருந்து பீரங்கி ஒன்றை வாங்கி வந்து அந்தப் புனித இடத்தின் நிர்வாகியிடம் அன்பளிப்புச் செய்தார். கி.பி. 1944 வரை இந்த பீரங்கி தொண்டி திருவிழாவின் பொழுது பயன்படுத்தப் பட்டு வந்தது.

இந்த பீரங்கியை வைத்துக்கொள்வதற்கான உரிமத்தை கி.பி. 1881ல் மதுரை ஜில்லா கலெக்டர் வழங்கினார். 1914ல் நிரந்தர உரிமமும் இந்திய அரசிடமிருந்து பெறப்பட்டது. இந்த ஆவணங்-கள், அந்தப் புனித இட அறங்காவலர் ஜனாப். சேகு அபூபக்கர் சாகிபு அவர்களிடமிருந்து பெறப் பட்டு உள்ளன. அவைகளில் இருந்து, சென்ற நூற்றாண்டில் ஆங்கில கலெக்டர்களிடம் கொடுக்கப் படும் மனுக்கள் அரசாங்க முத்திரைக் காகிதங்களில் எழுதப்பட்டு கொடுக்கப்பட்டு வந்தது. இந்தியா-வின் வடகோடியில் சிம்லாவில் இருந்து இயங்கிய இந்திய அரசு, மூன்று மாத காலத்திற்குள் உரிமத்-தை வழங்கி இருப்பது, உரிமப்படிவம் அப்பொழுதே தமிழில் வரையப்பட்டு இருப்பது, ஆகியவை புதுமையாக உள்ளன. நூறாண்டுகளுக்கு மேற்பட்ட இந்த ஆவணங்களைச் சேகரித்து மாவட்ட ஆவணக் குழுவிடம் டாக்டர். எஸ். எம். கமால் அவர்கள் ஒப்படைத்தார். அவைகளைப் பாதுகாப்பாக வைத்திருப்பதற்காக சென்னையில் உள்ள தமிழ்நாடு ஆவணக் காப்பகத்திற்கு மாவட்ட ஆட்சியர் அவர்கள் அனுப்பி வைத்துள்ளார்கள்.

---

## முகவையில் முதிர்ந்த முத்துக்கள் (தொடர்ச்சி)

11. **பாம்பன் சுவாமிகள்:**

சிறந்த முருக பக்தர், அதிசய சித்துக்களைச் செய்து காட்டிய அற்புத மனிதர், பல ஆயிரம் பக்திப்பாடல்களை படைத்த யோகி.

12. **சீமான் சீனிவாச ஐயங்கார்:**

சிறந்த சட்ட மேதை, இந்திய தேசியக் காங்கிரசின் தலைவராக விளங்கிய (1927) பெரும் தேசபக்தர்.

13. **பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர்:**

சிறந்த தியாகி, சிவநெறிச்செல்வர், பாட்டாளி மக்கள் நலனுக்கு பாடுபட்ட தொண்டர், பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தின் பரம எதிரிகளில் ஒருவர்.

இவர்களும் இவர்களைப் போன்ற புலவர்கள், ஞானிகள், நாட்டுக்குழைத்த நல்லவர்கள், சம்பந்தப்பட்ட பொருட்கள், கடிதங்கள், கையெழுத்து வரைவுகள் இருந்தால், அவைகளைப் பாதுகாத்து வளரும் தலைமுறையினருக்கு நினைவு காட்டுவதற்கு இராமநாதபுரம் மாவட்ட வரலாற்றுக் குழுவினரிடம் உடனே ஒப்படைத்து உதவுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறோம்.

## புதுமையான எல்லைக்கல்

தங்களது சீமையில், சமயங்கள் செழித்து தழைக்க வேண்டும் என்ற பெருநோக்கில் சேதுபதி மன்னர்கள் திருக்கோயில்களுக்கும் திருமடங்களுக்கும் பல ஊர்களை சருவமானியமாக வழங்கி உள்ளனர். இவ்வாலயங்களுக்கு வழங்கப்பட்ட நிலங்களின் எல்லைக்கல்லாக "திரிசூலம்" பொறித்த கற்களும் பெருமாள் கோயில்களுக்கு வழங்கிய நிலங்களுக்கு "சக்கரம்" பொறிக்கப்பட்ட எல்லைக் கற்களும் நடப்பட்டன. முந்தைய தமிழ் மன்னர்களும் இத்தகைய எல்லைக் கற்களை நட்டுள்ளதை தமிழகத்தின் பல ஊர்களில் பார்க்கலாம்.

ஆனால், கிறித்தவ சமய "சிலுவை" பொறித்த எல்லைக் கல்லை, பெரியபட்டினம் கிராமத்தில்தான் பார்க்க முடியும். முத்துப்பேட்டை தேவாலயத்திற்கு. கிபி. 1782ல் முத்துப்பேட்டை கிராமத்தை, இராமநாதபுரம் முத்துராமலிங்க சேதுபதி மன்னர் சருவமானியமாக வழங்கிய பொழுது, முத்துப்பேட்டை கிராம எல்லையை நிர்ணயம் செய்து, இந்த எல்லைக்கல் நடப்பட்டதாகத் தெரிகிறது. பெரியபட்டினத்திலிருந்து கிழக்கே கடற்கரை செல்லும் பாதையில் உள்ள தென்னந்தோப்பிற்குள், சற்று சிதைந்த நிலையில் இந்த புதுமையான எல்லைக்கல் உள்ளது. கள ஆய்வின் பொழுது அண்மையில் இந்தக்கல் கண்டு பிடிக்கப்பட்டது.

---

This News letter (Seithi Malar-Tamil) is published by Thiru. R. SELLAMUTHU, I.A.S., District Collector, Ramanathapuram, the Chairman of Ramanathapuram District Archives Committee.

Editor: Dr. Thiru. S.M Kamal, District Archives Committee. Ramanathapuram.

---

நூல்-அஞ்சல்.

இந்திய அரசுப் பணிக்கு மட்டும்

பெறுபவர்:

திரு. ____________________

____________________

____________________

அனுப்புதல்:
மாவட்ட ஆட்சித் தலைவர்,
இராமநாதபுரம்.

---

Printed at: SARASWATHI PRESS, RAMNAD.